Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பரதநாட்டிய உலகில் வயலினின் பங்கு

**முனைவர் சு.விஜய்ராகவன்**
வயலின் விரிவுரையாளர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
சென்னை–28
Email: voilin.vijayaraghavan@gmail.com

1

**ஆய்வுச் சுருக்கம்**

தென்னிந்தியாவில் ஆலயங்கள் கலைகளின் கொலுவிடமாகத் திகழ்ந்து வருகின்றன. ஓவியம், சிற்பம், நாட்டியம் ஆகிய கலைகள் ஆலயங்களில் இன்றும் சிறப்புடன் விளங்கி வருகின்றன. நடன கலைக்கு வயலினின் அறிமுகமும், பங்களிப்பு பற்றியும் இக்கட்டுரையில் ஆய்ந்து உரைக்கலாகிறது. யாழ், குழல், வீணை ஆகிய இசைக்கருவிகள் தொடக்க காலத்தில் பக்கத் துணைக் கருவிகளாக செயல்பட்டு இருந்தாலும் ''வயலின்'' எனும் நரம்புக் கருவியானது பரதநாட்டிய உலகிற்கு அறிமுகமானது முதல் அதன் பங்கு பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

தென்னிந்தியா, ஆலயம், ஓவியம்,சிற்பம், நடனம், யாழ், குழல், வீணை, வயலின்.

**ஆய்வின் நோக்கம்**

கலை உலகில் பரதநாட்டியத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. இக்கலைக்கு பக்கத்துணையாக கருவியாக வழக்கில் இருந்த மற்ற கருவிகளைக் காட்டிலும் வயலின் எனும் நரம்புக் கருவியின் சிறப்பு என்ன என்பதனையும், இதன் பயன்பாட்டின் விதத்தினை விளக்குவது இந்த ஆய்வின் நோக்கம் ஆகும்.

**முன்னுரை:**

கலை வளர்ச்சியில் தஞ்சைக்கு தனி இடம் உண்டு. சோழ, நாயக்க, மராட்டிய மன்னர்கள் நாட்டியக் கலையினை பெரிதும் போற்றி வந்தனர். அன்று, ''ஆடல்'', ''கூத்து'', ''சதிர்க்கச்சேரி'' எனவும் அழைத்தனர். இந்நிகழ்வுகளில் நட்டுவனார், நடனப்பெண்கள், குரலிசையாளர், இசைக்கருவிகள் இசைப்பவர் இருந்தனர்.

**ஆடல் இசை:**

பரதநாட்டிய அரங்கில் பல இசைக்கலைஞர்களின் திறமைகள் ஒருங்கிணையும் ஓர் ''நாட்டிய இசைச் சங்கமம்'' என அழைக்கலாம். நட்டுவனாரின் தாள, ஜதி, ஒலி, குரலிசை, மத்தள இசை, வயலின், வீணை, புல்லாங்குழலிசை ஆகியவை இந்நிகழ்விற்கு சிறப்பு தரும் வகையில் ஆடல் அரங்கில் இணைந்து செயல்படும் முறையே ''ஆடல் இசை'' என அழைக்கப்படுகிறது.

இத்தகையதோர் இசை முறை பழந்தமிழரால் கையாளப்பட்டது என்பதை.

1. ''யாழும் குழலும் சீரும் மிடறும் தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின் இயைந்த பாடல் இசையுடன் படுத்து'' (சிலம்பு 3:26-30) என்கிற சிலப்பதிகார குறிப்பால் அறிய இயலுகிறது.

2. ''பரத இசை மரபு'' எனும் நூலில் முனைவர் ஞானாகுலேந்திரன் அவர்கள் ஆடல் இசைப் பற்றி கூறுகையில்,
   பரதநாட்டிய நிகழ்வானது ஒரு கூட்டு முயற்சியாகும். ஆடல், நட்டுவாங்கம், குரலிசை, நரம்புக்கருவிகளிசை, தோற்கருவியிசை ஆகிய அனைத்தும் ஒட்டுமொத்தமாக ஒரு முழுமையான இசையில் நிகழ்ச்சியினை உருவாக்குவதே பரதக்கலை நிகழ்ச்சியின் வெற்றிக்கு முதன்மைக் காரணமாக அமைகிறது.

**தொடக்க நிகழ்வுகள்:**

நாட்டிய நிகழ்ச்சியின் தொடக்க நிகழ்வாக முதலில் நட்டுவனார் சில ஜதிகளை தன் கையில் உள்ள தாளத்தினைத் தட்டியவாறு கொன்னிப்பார். இந்த ஜதிகள் ''தாம், தீம், தொம், நம்'' போன்ற பீஜா அட்சரம் தொடர்பான சொற்களால்அமைந்திருக்கும். பின்பு முத்தாய்ப்பு வைத்து முடிப்பார்கள். நாட்டியத்தின் இந்தத் தொடக்கப்பகுதியே ''மேளப்ராப்தி'' என அழைக்கப்படும்.

**பரதநாட்டியத்திற்கு வயலின் அறிமுகம்:**

3. தஞ்சை நால்வருள் ஒருவரான திரு.வடிவேலு (1810) அவர்கள் செவ்விசையினை நன்கு அறிந்ததோடு மட்டுமின்றி மேலை நாட்டு இசையை நன்கு பயிற்சி பெற்றிருந்தார். தஞ்சை அரசவையில் திரு.ஐசக் ஜான்சன் எனும் மேலைநாட்டு வயலின் கலைஞரிடம் திரு.வடிவேலு மேலைநாட்டு சுரங்களை வயலினில் இசைக்க கற்றார். பின்பு செவ்விசையினை வயலினில் இசைத்து நாட்டிய நிகழ்ச்சிகளுக்கும் வயலினை அறிமுகப்படுத்தினார்.

4. முனைவர் சௌரீந்திரமோகன் தாகூர் என்பவர் சென்னை மாகாணத்தில் வயலினை செவ்விசை உலகிற்கு முதன் முதலாக இசைத்து, அறிமுகப்படுத்திய இசைமேதை திரு.வடிவேலு

என்பவர்தான் என கூறியுள்ளார்.

5. சிலப்பதிகார காலத்தில் யாழும், குழலும் நாட்டியத்திற்கு பக்கத் துணைக் கருவியாக விளங்கி வந்தது. மனிதனின் குரலிலும், குழலிலும் ஒரே சுரத்தினைத் தான் இசைக்க முடியும். நரம்பு இசைக் கருவியான வயலினில் பல சுரங்களை ஒரே சமயத்தில் இசைக்க இயலும். இவ்வாறாக வயலின் எனும் நரம்புக் கருவியின் பரிணாம வளர்ச்சியின் வாயிலாக நடனம் ஆடுபவரின் உணர்ச்சிகளை வெளிக்கொணரவும், குரலிசையாளருக்கு தொய்வின்றி பக்க பலமாக ''தொடர் இசை'' (Continuity)யினை இசைக்கக் கூடிய நரம்புக் கருவி வயலினே ஆகும்

நடன நிகழ்வு தொடங்குமுன் முதலில் வயலினில் நடனம் ஆடுபவரின் பாடலின் பண்ணை நன்கு இசைக்கும்பொழுது நிகழ்வு தொடங்குவதற்கான அறிகுறியும், அதே சமயத்தில் அப்பண்ணினை அழகோடு இசைப்பதால் குரலிசையாளருக்கு பக்கபலமாகவும் திகழ்வது வயலின் என்றால் மிகையல்ல.

**நாட்டிய இசை உருப்படிகள் மற்றும் வயலினில் இசைக்கும் முறைகள்:**

**1) அலாரிப்பு – வயலின்**

நாட்டியத்திற்கு முகவுரை போல அலாரிப்பானது, தொடக்கப் பகுதியாகும். ஆடுபவர் சபையினை நோக்கி சமபாத நிலையில் தியானத்துடனிருந்து கரங்களில் அஞ்சலி ஹஸ்தம் கொண்டு சிரசின் அசைவான ''அட்டமி'' என்கிற பாகத்திலிருந்து அலாரிப்பு தொடங்கும். இது தாளத்தினை அடிப்படையாகக் கொண்டுத் தத்தகாரமாகிய சொற்கட்டுகளால் விளம்ப, மத்யம, துரித கால அமைப்புகளுடனும் இறுதியில் மகுட பாக கோர்வையுடன் முடிவடைகிறது.

அலாரிப்பு திஸ்ர, சதுஸ்ர, கண்ட, மிஸ்ர, சங்கீர்ண ஆகிய ஜதிகளின் அடிப்படையில் அமைந்திருக்கும். வயலினில், உதாரணத்திற்கு கண்ட அலாரிப்பு எனில் 5 சுரங்களை கொண்ட ராகங்களை (மோகனம், சூர்யா, வாசந்தி, இந்தோளம்) கையாண்டு அந்த அலாரிப்பினை குறிப்பிட்ட நான்கு பகுதிகளாகப் பிரித்து நான்கு ராகங்களை வயலினில் இசைப்பதன் மூலம் உருப்படியின் அழுகினை மிளிரச் செய்வதில் வயலினின் பங்கு இன்றியமையாதது.

**2) ஜதீசுரம் – வயலின்**

நாட்டியக் கலையில் இரண்டாவது அங்கமாகச் சேர்க்கப்பட்டுள்ள ஜதீஸ்வரம் – சொற்கட்டுகளை ஆதாரமாகக் கொண்டும் அதற்கு சுரத்வமான பல்லவி, அனுபல்லவி போன்ற உறுப்புகளைப் பெற்றும் உள்ளது.

வயலினில் இப்பகுதியினை நாட்டியம் தொடங்குவதற்கு முன்பாக ஜதீஸ்வரத்தின்

பல்லவியில் தொடங்கும் சுரங்களை கற்பனை வளத்துடன் இசைக்கும்பொழுது குரலிசையாளருக்கும், பார்வையாளர்களுக்கும் ஜதீசுவரத்தின் அமைப்பினை புரியும் வண்ணம் உணர்த்தலாம். ஜதீசுவரத்தில் உள்ள இடைவெளியினை நிரப்பி வயலினில் இசைக்கும்பொழுது ஜதீசுவரத்தின் அழகு மேலும் மிளிரும் (உ.ம்) கல்யாணி ராக ஜதீசுவரத்தில் சா;; எனும் சுரம் கொண்டுள்ள இடைவெளி (கார்வைகள்)யினை சநிதபமபதநிசா; என 6 சுரத்தினை 12 ஸ்வரங்களாக இசைக்கும் பொழுது தாளக்கட்டுகளுக்கும் பொருந்தி நாட்டியத்திற்கு சிறப்பு சேர்க்க இயலாது.

**3) வர்ணம்– வயலின்**

நாட்டியத்தின் மையப் பகுதியான வர்ணம் எனும் உருப்படியானது, ஒரு சமூகத்தினை சார்ந்த நால்வகை வருணத்தாரை அதாவது அந்தண, அரச, வணிக, வேளாளர்கள் பற்றி விடுவித்து மொழிவது ஆகும். இதற்கு சான்று, சிலப்பதிகாரத்தில் ‘‘கடலாடு காதை’’ பகுதியில் உள்ளது. வர்ணம் இசைப்பதை ‘‘தானக்கிரியை’’ என அழைக்கப்படுவதுண்டு. இது ஸ்தாயி, ஆரோஹி, அவரோஹி, சஞ்சாரி என நான்கு வகைப்படும். பல்லவியில் 2 ஜதிகளும், அனுபல்லவிக்கு 1 ஜதியும் சரணத்திற்கு 1 ஜதியும் சொல்வது வழக்கம். வயலினில் வர்ணத்தில் பண்ணினை விரிவாக இசைக்க வேண்டும். வர்ணத்தில் வரும் ஜதி தீர்மானங்களும் முழுதும் இசைக்காமல், தீர்மானத்தின் நிறைவுப் பகுதியில் 3வது முறை வரும்பொழுது அத்தீர்மானத்தினை நன்கு புரிந்து, வர்ணத்தில் பண்ணில் உள்ள சுரங்களை நட்டுவனாரோடும், மிருதங்க கலைஞரோடும், இணைந்து முடிவு சுரங்கள் வர்ணத்தின் அடுத்த வரிக்கு உண்டான சுரங்களை வைத்து குரலிசையாளர் எளிதாக இசைக்க பெருமளவில் உதவும். வர்ணத்தின் கதைக்கு ஏற்றாற்போல் சஞ்சாரியினை உணர்வுபூர்வமாக வயலினில் இசைக்கும்பொழுது ஆடுபவரது உணர்ச்சிகளை வெளிக்கொணர எளிதாக இருக்கும்.

**தில்லானா – வயலின்**

6. தாள சொற்கட்டுகளை மையமாகக் கொண்டு இயற்றப்படும் உருப்படி தில்லானாவாகும். இது ஜதிகள் போல் உச்சரிக்காமல் இசைக்கப்படும் இசை உருப்படியாகும். ‘‘தில்லானா’’ என்பது வடமொழி இசைகளுள் ஒன்றாகும். இது தில்லானா, தித்தில்லானா, தொம்ருதானி போன்ற பல சொற்கட்டுகளைச் சேர்த்து பண் மற்றும் தாளப் பொருத்தத்துடன் பல்லவி, அனுபல்லவி சரணங்களாக அமைக்கப்பட்டு இருக்கும். இந்த உருப்படியானது நிகழ்வின் இறுதிப் பகுதியாக அமையும்.

வயலினில் தில்லானாவின் பண்ணினை இசைக்கும்பொழுது விறுவிறுப்பாக இசைப்பது அவசியம். மற்ற உருப்படிகளான பதம், ஜாவளி, தரு போன்ற உருப்படிகளுக்கு பண்ணினை

இசைக்கும் வேகத்தினை விட சற்றுக் கூடுதலாக துரித காலத்தில் இசைப்பது இந்த உருப்படிக்கு அழகு சேர்க்கும்.

**நாட்டியத்தில் நவரசமும், வயலினும்:**

7.1 சிருங்கார ரசத்திற்கு அமீர்கல்யாணி, பெஹாக் போன்ற பண்களும்,
2. ஹாஸ்ய ரசத்திற்கு கதனகுதூகலம், பிலஹரி போன்ற பண்களும்,
3. வீர ரசத்திற்கு அடாணா, சிம்மேந்திர மத்யமம் போன்ற பண்களும்,
4. அற்புத ரசத்திற்கு நிரோஷ்டா, மானவதி போன்ற பண்களும்,
5. ரௌத்ர ரசத்திற்கு பந்துவராளி, தர்மவதி போன்ற பண்களும்,
6. பீபத்ஸ ரசத்திற்கு தன்யாஸி, ஆஹிரி போன்ற பண்களும்,
7. பயனாக ரசத்திற்கு வாசந்தி, நீலமணி போன்ற பண்களும்,
8. கருணை ரசத்திற்கு துவிஜாவந்தி, சஹானா போன்ற பண்களும்,
9. சாந்த ரசத்திற்கு நாதநாமக்ரியா, சாமா போன்ற பண்களும்

வயலினின் இசைக்கும்பொழுது ஆடுபவது உணர்ச்சிகளை அரங்கில் உணரச் செய்ய இயலும்.

**முடிவுரை:**

பரதநாட்டிய உலகில் இன்றும் வயலினின் பயன்பாடு மிகுந்த இன்றியமையாத நரம்புக் கருவியாக விளங்கி வருகிறது. வயலின் தொடர் இசையினால் அனைத்துவித உருப்படிகளுக்கும் அதன் தன்மை, உணர்ச்சி வெளிப்பாடு, அபிநயங்கள் போன்ற பல விடயங்களுக்கு முழுவதும் பொருந்தக் கூடிய நரம்புக் கருவி வயலினே ஆகும்.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழிசை ஆய்வு மாலை – முனைவர் சுரேஷ் (பக்.92)
2. பரத இசை மரபு – முனைவர் ஞானாகுலதேசிகன் (பக்.40)
3. மரபுவழி பேராசான்கள் – முனைவர் பி.எம்.சுந்தரம் (பக்.100)
4. பரத இசையும், தஞ்சை நால்வரும் – கே.பி.கிட்டப்பா (பக்.10, 11)
5. புல்லாங்குழல் ஓர் ஆய்வு – திரு.சூ.அ.தனபாண்டியன் (பக்.114)
6. தி ஸ்பௌண்டர் ஆஃப் சௌத் இண்டியன் மியூசிக் – திரு.பி.டி. செல்லத்துரை

(பக்.185)

7. பரதநாட்டிய சாஸ்திரம் – ‘‘கலைமாணி’’ என்.எஸ்.ராமதேசிகன்

**துணைநூற்பட்டியல்**


| | |
|---|---|
| 1 முனைவர். சுரேஷ் | தமிழிசை ஆய்வு மாலை,<br>மூன்றாம் பதிப்பு, 2009,<br>முருகு பதிப்பகம், மதுரை. |
| 2 முனைவர். ஞானாகுலதேசிகன் | பரத இசை மரபு.<br>முதற் பதிப்பு, 1994,<br>கிருஷ்ணா பதிப்பகம், தஞ்சை. |
| 3 முனைவர். பி.எம்.சுந்தரம் | மரபு வழி பேராசான்கள்,<br>முதற் பதிப்பு, 2002,<br>மணிவாசகர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை |
| 4 கே.பி.கிட்டப்பா | பரத இசையும், தஞ்சை நால்வரும்,<br>முதற் பதிப்பு, 1983,<br>தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை. |
| 5 புல்லாங்குழல் ஓர் ஆயவு | திரு.து.ஆ.தனபாண்டியன்,<br>முதற் பதிப்பு, 1991,<br>தமிழ் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சை. |
| 6 திரு.பி.டி.செல்லத்துரை | தி ஸ்பௌண்டர் ஆப் சௌத் இண்டியன் மியூசிக்,<br>நான்காம் பதிப்பு, 2010,<br>வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல், |
| 7 பரதநாட்டிய சாஸ்திரம் | திரு.எஸ்.என். ராமதேசிகன்,<br>முதற் பதிப்பு, 2001,<br>யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ், சென்னை. |